*16*

# ஜெபத்தின் மீது நடைமுறைச் சுட்டிக்காட்டிகள் (5:13-18)

*அது அங்கே - 17ம் வசனத்தில் - சரியாக உள்ளது, "எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும் ..." உங்களைப்பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அது எனக்கு ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது. நான் இயன்ற அளவு முயற்சி செய்தும், எலியா என்னைப்போல இருக்கிறார் என்று நினைப்பதில் கடினமான வேளையைக் கொண்டுள்ளேன். அவர் அவ்வாறு இருக்கிறார் என்று யாக்கோபு கூறுவதால் அது பிரச்சனையாக உள்ளது!*

*எலியாவை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர், ஆகாப் அரசருக்கு முன்பாக சரிக்குச் சரியாக நின்று, அவரது இராஜ்யத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மழைபெய்யாது என்று அவருக்குக்கூறிய, மிகவும் தைரியம் வாய்ந்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியாய் இருந்தார். அவர் விசுவாசத்தில் நெஞ்சுரம் மிக்கவராக, இறந்துபோயிருந்த ஒரு பையனுக்காகத் தேவனிடத்தில் ஜெபித்து, அந்தப் பையனை உயிரோடு எழுப்பியவராக இருந்தார். அவர் தேவனுடைய சத்தியத்தை தற்காக்க பயமற்றவராக இருந்து, கர்மேல் மலையின் உச்சியில் நடந்த போட்டியில், வானத்தில் இருந்து அக்கினியை வரவழைக்கும்படி, பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேர்களுக்கும், ஆசேராவின் தீர்க்கதரிசிகள் 400 பேர்களுக்கும் அறைகூவல் விடுத்தார், பின்பு வெற்றிக்கொண்டாட்டத்தில் அவர்களின் தலைகளை வெட்டுவித்தார். இருபதாம் நூற்றாண்டில் வாழும் எந்த ஒரு தனிநபரும் இதைப்போன்ற மனிதருடன் தன்னை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்?*

*தேவனுடைய மாபெரும் மனிதர்கள் ஜெபிக்கிற மனிதர்களாக இருந்தனர் என்று யாக்கோபு கூறுகிறார் என்பதையே நாம் காணவேண்டும்! அவர்கள் ஜெபத்தைப் பற்றிப் பேசுகிற, ஜெபத்தில் தாங்கள் கண்டுள்ள நம்பிக்கையை விளம்பரப்படுத்துகிற அல்லது ஜெபத்தைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் விளக்க முயற்சி செய்கிற மனிதர்களாகக் கூட இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. தேவனுடைய உண்மையான மக்கள் தாழ்மையும், அர்ப்பணிப்பும் உள்ளவர்களாக, ஜெபிப்பதற்கு உண்மையிலேயே நேரம் எடுத்துக்கொள்பவர்களாக இருக்கின்றனர். இந்த மக்கள் நம்மைக் காட்டிலும் அதிகம் நேரம் கொண்டிருப்பதில்லை; நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது வாழ்வில் நிரப்பி இருக்கும் விஷயங்களைக் காட்டிலும் ஜெபத்தை அவர்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றனர். வல்லமையின் தேவனும், தமது பிள்ளைகளின் வேண்டுதல்களைக் கேட்டுப் பதில் அளிக்கிறவருமானவர் மீது விசுவாசித்து எலியா போன்ற நபர்கள் ஜெபத்தின்மூலமாக அவரது வல்லமையை உரிமைகோரியுள்ளனர்.*

*யாக்கோபு நிருபம் தனது இயல்பில் மிகவும் நடைமுறைத்துவம்*

*உடையதாகையால், அது ஜெபத்தைப் பற்றி உரைப்பதை நீங்கள் இயல்பாகவே எதிர்பார்ப்பீர்கள். அது அவ்வாறே செய்கிறது! நமது ஜெப வாழ்வில் விசுவாசம் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை யாக்கோபு காண்பிக்கப்போகிறார். நமது பாடத்திற்கான வேதவசனப் பகுதியான யாக்கோபு 5:13-18ல், கவனத்துடன் படித்தாக வேண்டிய, ஜெபத்தின்மீதான வழிகாட்டும் குறிப்புகள் சில உள்ளன.*

## ஜெபம் செய்ய அழைக்கும் கடினமான சூழ்நிலைகள்

*யாக்கோபு, இந்த நிருபம் முழுவதிலும் உள்ள தமது வழக்கத்தின்படியே, இந்த புத்திமதியை நடைமுறைக்குரியதாகச் செய்கிறார். ஜெபத்தை வற்புறுத்தும் நேரங்கள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறார். குறிப்பாக அவர், ஜெபத்தில் நம்மையே நாம் தேவனிடத்தில் தாழ்த்த வேண்டும் என்று மூன்று முறை குறிப்பிடுகிறார், அதாவது "துன்பப்படும்போது, வியாதிப்படும்போது மற்றும் பாவத்தினால் மேற்கொள்ளப்படும்போது." இந்தச் சூழ்நிலைகள் ஒவ்வொன்றையும் நாம் தனித்தனியே ஆழ்ந்து சிந்திப்போம்.*

*முதலாவது, நாம் துன்பத்தினால் எதிர்கொள்ளப்படும்போது, ஜெபம் அவசியமாக உள்ளது. 13ம் வசனத்தில், "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்'' என்று யாக்கோபு கூறுகிறார். மற்ற மொழி பெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள்,* NIV *மொழிபெயர்ப்பில் உள்ள "துன்பம்"* [''trouble''] *என்ற வார்த்தையின் அர்த்தத்தை அளவிட நமக்கு உதவுகின்றன.* KJV *வேதாகமம்* ''afflicted'' *என்று கூறுகிறது.* ASV, RSV *மற்றும்* NASB *ஆகியவை* ''suffering'' *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. கிரேக்க வார்த்தையானது இந்த வார்த்தைகள் எல்லாவற்றைக் காட்டிலும் விசாலமானதாக உள்ளது. மறைந்த* J. W. *இராபர்ட்ஸ் என்பவர் இவ்வார்த்தையைப் பின்வருமாறு விவரித்தார்:*

> *இவ்விடத்தில் துன்புறுதல் என்பது வியாதி சுகவீனம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகம் பொதுவான விஷயமாக உள்ளது. வேறிடத்தில் இதன் பயன்பாட்டில், இது உபத்திரவத்தை சிரமத்துடன் அனுபவித்தல் (2 தீமோத்தேயு 2:9) மற்றும் சுவிசேஷ ஊழிய வாழ்வின் துன்பம் (2 தீமோத்தேயு 2:3; 4:5) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். யாக்கோபு 5:10ல், யாக்கோபு தீர்க்கதரிசிகளின் பாடுகள் மற்றும் துன்பம் ஆகியவற்றைக் குறிப்பிடும்போது, யாக்கோபு இதே வார்த்தையைத் திரும்பவும் பயன்படுத்துகிறார்.*[1]

*இவ்வார்த்தையின் இந்தக் கருத்துடன் நீங்கள், உங்கள் வேதனை, துக்கம், இழப்பு, சோர்வு அல்லது வருத்தம் எதுவாக இருந்தாலும் ஜெபத்திற்குத் திரும்புங்கள் என்று யாக்கோபு கூறுகிறார். அந்த ஜெபத்தைத் தேவன் கேட்டு, தேவையான உதவி மற்றும் பலப்படுத்துதலைக் கொண்டு பதில் அளிக்கும்போது, அவரது அன்பு மற்றும் உதவி ஆகியவற்றிற்காக நாம் தேவனைத் துதிக்க மறவாது இருப்போமாக.*

*அடுத்ததாக யாக்கோபு, வியாதியின்வேளையின்போது நாம் ஜெபத்தில் தேவனிடமாய்ச் சாயவேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறார்.*

இதை அவர் "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் ..." என்று கூறுவதன்மூலம் செய்கிறார் (5:14, 15அ). நாம் அந்த வசனங்களை வாசிக்கும்போது, யாக்கோபு கூறுவதின் பிரதான வலியுறுத்தமான, *வியாதிப்பட்டவர்ளுக்காக ஜெபம்* என்பதைப்பற்றி மறந்துபோகும் அளவுக்கு, நாம் இவ்வசனப்பகுதியின் மறைவான கருத்துக்கள் பற்றிய கலந்துரையாடலில் மிகவும் அடிக்கடி அதிகமாக மூடப்படுகிறோம். இது உடல்ரீதியான நலிவுகள் எல்லாவற்றிலும் மிகவும் பொதுவானதாக உள்ளது, மற்றும் யாக்கோபு இதைத் தேவனிடத்தில்திருப்பும்படி கூறுகிறார் (1 பேதுரு 5:6). வியாதிப்பட்ட மனிதரைக் குணமாக்குவது எது? "விசுவாசமுள்ள ஜெபமேயாகும்" என்று யக்கோபு கூறுகிறார். விசுவாசமுள்ள ஜெபம் என்பது, நாம் எதைக் கேட்கிறோமோ அதைத் தேவன் செய்ய முடியும் என்று விசுவாசத்துடன் ஏறெடுக்கப்படும் ஜெபமாகும் (1:6; 1 யோவான் 5:14).

ஆனால் நாம் விசுவாசத்தில் கேட்கிறோம், [ஆயினும்] வியாதிப்பட்டவர்களில் சிலர் நலம் அடைவது இல்லை! வியாதிப்பட்டவர்கள் எப்போதுமே குணம் அடைகின்றனரா? இல்லை. தவறாக புரிந்துகொள்ள வேண்டாம். நமது ஜெபங்கள், தேவன் நமது உலகத்தில் செயல்பட்டு விஷயங்களை மாற்றக் காரணமாகக்கூடும். எசேக்கியாவின் ஜெபத்திற்குப் பதில்செயலாக, அவரது வாழ்நாளில் பதினைந்து ஆண்டுகள் கூட்டித் தந்த தேவனுடைய உதாரணம் (2 இராஜாக்கள் 20), இதைச் செயல்விளக்கப்படுத்துகிறது. யோவான், "*நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி* கேட்டால், ..." என்று கூறுமிடமான 1 யோவான் 5:14ம் வசனம் நமது புரிந்துகொள்ளுதலுக்கான திறவுகோலாக இருக்கலாம் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). சிலவேளைளில், தேவனுடைய சித்தம் என்னவாக இருக்கலாம் என்பதை ஆழ்ந்து சிந்திக்க மறந்து போகும் அளவுக்கு *நாம்* சில விஷயங்களை விரும்பலாம். நாம் பின் திரும்பிச் சென்று, தோட்டத்தில் இயேசுவின் ஜெபத்தை ஆராய்வு செய்து அந்த ஜெபத்தின் ஆவியை அறிதல் அவசியமாக உள்ளது. நாம் விரும்புவது என்ன என்பதைத் தேவன் அறிய அனுமதித்தல் தவறல்ல, ஆனால் அவரது சித்தம் எதுவாக இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்ள பலமும் தைரியமும் வேண்டும் என்று கேட்பதும் நமக்கு அவசியமாக உள்ளது.

மூன்றாவதாக, பாவத்தின் குற்றத்தினால் நாம் கீழாக்கப்பட்டிருக்கும்போது, நாம் தேவனை நோக்கிச் சாய்தல் அவசியம் என்று யாக்கோபு கூறுகிறார். 15ஆ மற்றும் 16ம் வசனங்களில் அவர், "அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்" என்று கூறுகிறார். 15ம் வசனத்தின் பிற்பகுதி, 14ம்வசனம் மற்றும் 15ம் வசனத்தின் முற்பகுதி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அதே மனிதரைப் பற்றியே பேசுகிறது என்பது சந்தர்ப்பப்பொருளில் இருந்து தெளிவாகிறது. மனிதர்களின் தனிப்பட்ட பாவங்களின் நேரடி விளைவாக மாத்திரமே உடல் நலக்குறைவு வருகிறது என்று இது போதிப்பதில்லை. இருப்பினும் இது, ஒருவர் வியாதிப்பட்டவேளைகளில், தமது ஆரோக்கியமான காலங்களிலே தாம்

தேவனைப் புறக்கணித்து இருந்ததின் உண்மையை நினைத்துப்பார்க்கும்படி வழிநடத்தி அந்தப் பாவங்களைத் தமது வியாதிப்பட்ட நிலையில் அறிக்கையிட்டு மன்னிப்பை நாடி வழிநடத்தலாம் என்று போதிப்பதாகக் காணப்படுகிறது. தேவனுடைய பிள்ளையாக இருந்தும் பாவம் நிறைந்துள்ள நிலையில் இருப்பவருக்கு, மன்னிப்பிற்குத் தேவன் ஒரு "நிபந்தனையை" கொண்டுள்ளார். இதற்கு மிகவும் ஒத்துப்போகும் வழியில்தான் யோவான், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று கூறுகிறார் (1 யோவான் 1:9). யாக்கோபுவும் யோவானும் ஆகிய இருவருமே, ஒருவர் தமது பாவங்களை ஒப்புக்கொள்ளப் போதிய அளவுக்குத் தேவனிடத்திலும் தமது சகோதரரிடத்திலும் தாழ்மை யாக இருக்க வேண்டும், மற்றும் சுத்திகரிக்கும்படி தேவனிடத்தில் கேட்க வேண்டும் என்று கூறுகின்றனர். இவ்வசனம், சபையின் முன்பாக ஒரு முறைப்படியான மன்னிப்பு என்று நாம் கருதுகிற விஷயத்தைத் தனிப்பட்ட முறையில் கையாளுவதில்லை, ஆனல் அப்படிப்பட்டதை நிச்சயமாகவே உள்ளடக்கியிருக்கும். அதுபோலவே, இது அறிக்கையிடுதல் ஏற்படுத்தப்பட வேண்டிய நடக்கையின் வகையைப் பரிந்துரைப்பதும் இல்லை. பலவித மான வழிகள் பயன்படுத்தப்பட முடியும் என்பது தெளிவு - 15 மற்றும் 16ம் வசனங்களில் போதிக்கப்பட்டுள்ளபடி அது சபைகூடுகையில் செய்யப்பட முடியும், மூப்பர்களின்முன்னிலையில் அது செய்யப்பட முடியும், ஒரு சகோதரர் மற்றொருவரிடத்தில் என்ற வகையினால் அது செய்யப்பட முடியும் அல்லது தனிநபரின் மனம்வருந்துதல் பற்றி பாதிக்கப்பட்ட குழுவினிடம் தகவல் அறிவிக்கக்கூடுமான மற்ற ஏதாவது வசதியான வழிமுறைகளில் அது செய்யப்பட முடியும். ஆனால் யாக்கோபு, அறிக்கையிடுதலின் ஜெபத்தினுடைய *அவசியம்பற்றி* அக்கறையாக இருப்பது போன்று, அவர் *எவ்வாறு* என்பது பற்றி அக்கறையாக இருப்பதில்லை.

## செயல்விளைவுள்ள ஜெபத்தின் அசைவாற்றல்

ஜெபம் தேவைப்படும் நேரங்கள் பற்றி நமக்கு தகவல் அறிவித்துள்ள யாக்கோபு "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ள தாயிருக்கிறது" என்று கூறுகிறார் (5:16ஆ). தனது பாவங்கள் அறிக்கையிடப்பட்டு மன்னிக்கப்பட்ட மனிதரே "நீதிமானாக" இருக்கிறார் என்று காணப்படும். அம்மனிதரின் ஜெபம், விளைவுகளைத் தருவிக்கக் கூடியதாக உள்ளது. அது அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நாம் புரிந்து கொள்வதற்காக, யாக்கோபு ஒரு உதாரணம் தருகிறார். அவர், "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாத மும் பூமியின்மேல் மழைபெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது" (5:17, 18). அங்கு அந்த வரி மீண்டும் உள்ளது: "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்." ஜெபம் மற்றும் அதன் வல்லமை ஆகியவை பற்றி நாம் கற்றுள்ள யாவற்றுடனும் நாம் மீண்டும், *எவ்வாறு?* என்று கேட்கிறோம். நமக்குக் கிடைக்கும் பலத்தின் அதே ஆதாரமூலத்தை எலியா தட்டினார் என்று நாம்

*கற்றுள்ளோம். வாழ்வை வெற்றியாக்கும் பலமும் வல்லமையும் தேவனிடத்தில் இருந்து மாத்திரமே கிடைக்கின்றன என்பது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது. ஜெபம் என்பது நம்மைத் தேவனைச் சார்ந்தவர்களாக ஆக்குவதன் மூலமாக மாத்திரம் மாற்றுவதில்லை ஆனால் அதன்மூலமாக, தேவன் நமக்காக விஷயங்களை மாற்ற முடியும்.*

## *முடிவுரை*

*நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளாத வரையிலும், நாம் கொண்டிருக்கவும் தேவனுடைய மகிமைக்காகவும் நமது சொந்த ஆவிக்குரிய முன்னேற்றத்திற் காகவும் நாம் பயன்படுத்தக் கூடியவையுமான பல ஆசீர்வாதங்களை நாமே நம்மைவிட்டு நீக்கிப்போடுவோம். பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள காப்பீட்டுப் பாலிசி ஒன்றை ஹென்றி ஃபோர்டு என்பவர் வாங்கியதைப் பற்றிய கதையொன்று கூறப்பட்டுள்ளது. காப்பீட்டு வர்த்தகத்தில் இருந்த, அவரது நல்ல நண்பர்களில் ஒருவர், தம்மிடத்தில் அவர் பாலிசி எடுக்காதது ஏன் என்று கேட்டார். “நீங்கள் என்னிடம் கேட்கவில்லையே” என்ற பதில் உடனே வந்தது.*

*நாம் ஜெபத்தின்மூலமாக கேட்காதபடியினால் தேவனிடத்தில் இருந்து எவ்வளவு நல்ல விஷயங்களை தவறவிடுகிறோம் என்று இந்த வசனப்பகுதி உங்களை வியப்படையச் செய்கிறதா? விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று யாக்கோபு காட்டுகிறார், அதில் உள்ள வேறுபாடானது நமக்குப் பின்வரும் விஷயங்களைப் போதிக்கிறது:*

1. *தேவனுடன் நிலையான ஒரு தொடர்பில் வாழுங்கள்.*
2. *நமது தேவைகள் தாராளமாக அளிக்கப்படும் என்ற தைரியத்துடன் தேவனைத் தொழுது கொள்ளுங்கள்.*
3. *நமது பலவீனங்கள் மற்றும் பாவம் நிறைந்த தன்மை ஆகியவற்றை அறிக்கையிட்டு, தேவனை நாம் சார்ந்திருத்தலை ஒப்புக்கொண்டு அவரது வழிக்கு நம்மை ஒப்புவித்தல்.*

---

*குறிப்பு*

[1]J. W. Roberts, *The Living Word Commentary,* “The Letter of James” (Austin, Tex.: Sweet Publishing Co., 1977), 162.